சிறப்பிதழ்
Special Issue

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

3-4 பங்குனி 2052
16th - 17th March 2021
ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

## Journal of Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) எளையாம்பாளையம், திருச்செங்கோடு
முதுகலைத் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்) வீராச்சிபாளையம், சங்ககிரி

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**
முனைவர் ம. கவிதா
முனைவர் செ. ஜெயந்தி

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

19 பகுதி-5
Part -5

மற்றொன்று:

## செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

ஜனவரி - மார்ச்

ஏப்ரல் - ஜூன்

ஜூலை - செப்டம்பர்

அக்டோபர்- டிசம்பர்

Journal of

## Classical Thamizh

**(A Quarterly International Multi lataral Thamizh Journal)**

January - March

April - June

July - September

October - December

ISSN:2321-0737

# பா. விஜய் கவிதைகளில் தொன்மமும் படிமமும்

**முனைவர் ந. கமலஹாசன்**
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம், திருச்செங்கோடு, தமிழ்நாடு, இந்தியா.

## ஆய்வுச்சுருக்கம்

அழகு என்பது மனிதனின் தோற்றத்தைப் பொறுத்தது அல்ல. அது அகஉணர்வைப் பொறுத்தது. ஆள்பாதி ஆடைபாதி என்று கூறிக்கொண்டாலும் உண்மையான அழகு வாய்மையால் வெளிப்படுவதே சிறந்ததாகக் கொள்ளப்பெறும். கவிஞர்களின் சீரிய சிந்தனை ஆற்றலால் உருவாக்கப்பெறும் படைப்புகள் நடைமுறை சிந்தனை, இயற்கை வருனணைகளோடு தோற்றம் பெற்றால்தான் ஆய்வுலகில் வெற்றியடையும் என்பது மறுப்பதற்கு இயலாததாகும்.

காலத்தையும் கடந்து ஓர் இலக்கியமும், இலக்கியப்படைப்பாளனும் வாழ வேண்டுமெனில் பாடுபொருள்களில் அணிநயங்கள், தொன்மம், குறியீடு, படிமம், இறைச்சி, உள்ளுறை என பல உத்திமுறைகளை கையாள்வதின் மூலம் சாத்தியமாகும் என்பதை உணரலாம். மேலும், இலக்கிய உத்திகளின் வழி எளிய நடையில் அமையம் பாடல் தொடர்களை அழகுற அமைத்துக் காட்ட இயலும் என்ற நிலையை முழுமையாகக் கண்டுணரலாம் என்பது ஆராயத்தக்கதாகும்.

## முன்னுரை

தமிழ் இலக்கிய உலகில் சங்ககாலந் தொடங்கி இக்காலம் வரை எண்ணற்றப் படைப்புகள் தோன்றி வளர்ந்த வண்ணம் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையானப் பொருண்மையை அக்காலக் கட்டத்திற்கு ஏற்ப விளக்குகின்றன. அவற்றுள் கவிதை என்ற இலக்கிய வடிவமும் ஒன்றாகக் கருதப்படுகிறது.

ஆரம்பக்காலத்தில் இலக்கண வரையறைக்கு உட்பட்ட மரபுக்கவிதை என்று அழைக்கப்பட்ட இவ்விலக்கியவகைமை காலப்போக்கில் புதுக்கவிதை என்ற மற்றொரு வடிவத்தையும் பெற்று விளங்கி வருகின்றது. நாட்டு நலன், சமூக முன்னேற்றம், மக்களின் அவலங்கள், பெண் விடுதலை, எதிர்க்காலத் திட்டங்கள், இயற்கை நிலை போன்ற பல வகைகளில் அமைந்தனவற்றை எல்லாம் ஆராய்வதில் புதுக்கவிதை தனக்கென தனியிடத்தைப் பெற்றுத் திகழ்கிறது.

நடைமுறை உலகின் நடப்பியல்புகளைத் தமது படைப்புகள் வாயிலாக எடுத்துக்காட்டுவதில் இளங்கவிஞர் பா. விஜய் குறிப்பிடத்தக்கவராக விளங்குகிறார். பழம்பெரும் புலவர்கள் போன்று இவரும் தமது கவிதைகளில் இலக்கிய - இலக்கண உத்திமுறைகளைத் திறம்படக் கையாண்டுள்ளார். அவற்றும் தொன்மம், படிமச் செய்திகள் ஆங்காங்கே காணப்படுவது இங்கு ஆராயப்பட்டுள்ளன.

## தொன்மம்

பதுக்கவிதையில் உவமை, உருவகம் போன்று தொன்மமும் ஒரு உத்திமுறையாகக் கையாளப்படுகின்றது. கவிஞர்களில் புராணங்களில் வரலாற்று நிகழ்வுகளை கவித்தொடர்களில் பதியவைத்து விளக்குவதும் வழக்கமாகவே கடைப்பிடிக்கப்படுவதும் இதன் சிறப்பிற்குச் சான்றாகும்.

தொன்மம் என்ற சொல் மித்து (ஆலவா) என்று ஆங்கிலத்தில் கையாளப் பெறுகிறது. தொல்காப்பியர் புராணம் என்ற நிலையில் கையாளுகிறார்.

"தொன்மம் தானே சொல்லுங்காலை
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே"[1]

என்ற நூற்பாவில் பழமைவாய்ந்த நிகழ்வுகளின் தொகுப்பு என்பதை உணர்த்துகிறார்.

"தொன்மங்கள் பொய்மைகளின் புகழிடங்கள் அல்ல உண்மைகளின் இருப்பிடம் கருத்துக்களின் வாழ்விடம் எண்ணங்களின் வரலாற்றுப் பெட்டகம், நினைவுகளின் சுழிமுனை"[2] என மேலைநாட்டு அறிஞர் கம்பெல் விளக்கம் தருகிறார். மக்களின் வாழ்வியலில் மலர்ந்த வரலாற்றுக் கருத்துக்களே காலங்கள் கடந்து தொன்மம் என்னும் பெயரில் அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

ஆதிகால மனிதன் நிர்வாணமாகக் காட்சியளித்த வேளையில் அரிய பல கண்டுபிடிப்புகளை நிகழ்த்தினான் என்பதை

"உலகின் ஆக்க பூர்வக்
கண்டுப்பிடிப்புகள்
எல்லாமே மனிதன் உடையின்றி
இருந்த
யுகங்களில் தான்"[3]

என்ற வரிகளால் கவிஞர் எடுத்துக்காட்டுகிறார். அதாவது பகுத்தறியும் சிந்தனையும் நாகரிக வளர்ச்சியும் ஏற்படாத காலங்களில் வாழ்ந்த மனிதர்கள் ஆடையின்றி அலைந்து திரிந்த போது நெருப்பைக் கண்டுபிடித்தல், அச்சாணியின் துணையோடு சக்கரம் அமைத்தல், விவசாயம் செய்தல் போன்ற அரிய பல செயல்களைச் செய்தனர். ஆனால் இன்றைய காலக்கட்டத்தில் உள்ளோர் நாகரிகம் என்ற போர்வையில் கலாச்சாரச் சீரழிவுகளைச் செய்து கொண்டிருக்கின்றனர் என்பதை வெளிப்படுத்துவதை உணரலாம்.

இந்திரனின் காமஇச்சைக்கு ஆளான அகலிகை கல்லாக சபிக்கப்படுகின்றாள். அதுபோல சில மூர்க்கக் குணம் கொண்டவர்களால் சமுதாயத்தில் விதவை பெண்களும் பல இன்னல்களுக்கு ஆளாகின்றனர்.

"அழுக்குச் சம்பிரதாயம்
ஆகாயம் தொடுகிறது
வழக்கு நடக்கிறது
கண்ணகியை அகலிகையாக்க"[4]

என்னும் தொடர்கள் மூலம் அறியலாம். ஆதிக்க வர்க்கம் கொண்ட ஆண்கள் உடல் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்குக் கணவனை இழந்த கைம்பெண்களைக் கொடுமைப்படுத்தும் நிலையோடு ஒப்பிடுவதைக் காணலாம். பொருளாதார நலிவினை ஆயுதமாகக் கொண்டு பெண்களைத் துன்புறுத்தும் நிலை அகலிகைக்கு ஈடாக காட்டப்படுவது நோக்கத்தக்கதாகும்.

"இளம்வயதில் எல்லாத் திசைகாட்டிகளுமே
காட்டும் ஒரே திசைதான்! காதல்!
ஆனால் அலெக்சாண்டரின் திசைகாட்டி
மட்டும்
யுத்த பூமியையே காட்டிக் கொண்டிருந்தது"

என்ற கவிதையின் வழி அலெக்சாண்டரின் வீரத்தையும் குறிக்கோளையும் ஒப்பிட்டு இன்றைய இளைஞர்கள் காதல் என்னும் மாயவலைகளில் சிக்காமல் எதிர்காலத்தில் வீறுநடையோடு வாழவேண்டிய சிந்தனையை விதைத்துள்ளதை அறியமுடிகிறது.

இளங்கன்று பயமறியாது என்பார்கள மனித வாழ்வில் இளமை பருவம் கிடைப்பதற்கு அரிதானப் பருவமாகும். அவ்வயதில் எதையும் சாதிக்கத்தூண்டும் என்பதும் பொதுவானச் சிந்தனையாகும். இளம் வயதில் மங்கை மீது காதல் கொண்டால் எதிர்காலம் கேள்விக்குறியாகப் போய்விடும் ஆதலால் நல்வழிப்படுத்தும் நோக்கில் கிரேக்க மன்னன் அலெக்சாண்டர் வீரம் ஒன்றே தமது உயிர்மூச்சாகக் கொண்டு செருகளம் சென்று பல மன்னர்களைப் புறமுதுகிடச்செய்த நிலையோடு ஈடுகாட்டும் உணர்வு ஆராயத்தக்கதாகும்.

## படிமம்

கவிதைகளில் கவிஞர் தான் சொல்ல வருகிற கருத்தை விளக்கமாகவும் எளிதாகவும் புரியவைக்க

கையாளப்படும் முறையில் படிமம் என்பதும் ஒன்றாகும். படிமமானது வெறுங்கற்பனை அலங்காரமாக மட்டுமல்லாத கருத்தழுத்தம் மிகுந்தும் அமைந்து வரும் என்றும் கூறுவர்.

"உருவம் கவிதையின் உயிர்நாடி எனினும் கவிஞரின் திறனை வெளிப்படுத்தும் உருவகம் நிலைத்துநிற்கும். இத்தகைய உருவகமே படிமமாகும். வெளிப்பாட்டு முறைகளில் சிறந்ததாகவும் படைப்போருக்கும் படிப்போருக்கும் இடையில் நெருக்கமான மனத்தொடர்பை ஏற்படுத்துவதாகவும் இப்படிமமே விளங்குகிறது"[5] என்று சி. டே. லூயில் குறிப்பிடுகிறார்.

"உருவம் அல்லாதவற்றிற்கும் உருவம் கொடுத்தலும் கருத்துப்பொள்களைக் காட்சிப் பொருளாகக் காட்டலும் ஆகிய கற்பனையின் வளர்ச்சி நிலையில் படிமம் அமைகிறது"[6] என மு. நிலாமணி விளக்கமளிக்கிறார்.

மேற்கண்ட சான்றுகளை நோக்கும்போது செய்யுளை அழகுப்படுத்தும் உருவகமே படிமம் என்பதையும் எளிமையானப் பொருளையும் தெளிவுறக் காட்சிப்படுத்தும் திறமும் படிமத்திற்கு உண்டு என்பதையும் காணமுடிகிறது.

"சென்னை நகரப் பெண்கள்
தண்ணீர் பஞ்சத்தின் போது
வீதிவீதியாய் வளைத்து
போட்டார்களே காலிகுடவரிசை
அதுவும் கோலம்தான்"[7]

என்று நாட்டில் நிலவும் தண்ணீர்ப்பஞ்சத்தின் நிலையை மையமிட்டுச் சென்னை நகரப் பெண்கள் தண்ணீருக்காக நிற்பதைச் சுட்டிக்காட்டுகிறார். வறுமையில் வாடிதவிக்கும் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் அத்தியாவசியப் பொருட்கள் வாங்கவும் நீண்ட வரிசையில் காத்துக் கிடப்பதைப் படிமமாகக் காட்சிப்படுத்துகிறார். தண்ணீர் கிடைத்தால்தான் பஞ்சந்தீரும் பொருளாதாரம் இருந்தால்தான் வறுமை ஒழியும் என்ற சிந்தனையைப் படிமப் பொருளாகக் காட்டுவதனை அறியலாம்.

இளமை, செல்வம், யாக்கை நிலையாமை தன்மை வாய்ந்தது என்பது ஒவ்வொரு மனிதனும் அறிந்து கொள்ள வேண்டிய உண்மையாகும். இவ்வுண்மையைக் கவிஞர் இறுதியில் சரணாகதி அடையுமிடம் இடுகாடு என்பதை நினைவூடுகிறார். இதனை,

"கழுகுகள் வட்டமிடும்
காடு!
பிணவாடை வீசியடிக்கும்
மேடு!
இது வாழ்க்கையின் கடைசிக்
கோடு!"[8]

நாட்டில் அரசியல் நிலையைக் கவிஞர் கழுகுகள் போன்று அரசியல் வலம் வருவதாகவும் நிர்வாகத் திறனின்றி கொள்ளையடித்தால் ஊழல் எனும் நாற்றம் வீசும் இடமாகவும் தேர்தலின் போது வாக்காளர்களின் விரலில் வைக்கப்படும் மையினால் ஏற்படும் கோடே அவர்களின் வாழ்க்கையை நிர்ணயம் செய்யக் கூடியதாகவும் இருக்கிறது என படிமங்களைக் காட்சிப்படுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார்.

பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் எனும் ஏழுவகை பருவமகளிர்களோடு எட்டாவது பருவப்பெண்ணாக இருப்பவள் முதிர்கன்னி ஆவாள். திருமண வயதைக் கடந்தும் நமது நாட்டில் இப்பெண்களின் நிலை உயர்ந்த வண்ணமே உள்ளது.

"ஆருடத்தையம்
ஆலமரத்தையும்
சுற்றிச்சுற்றி
சுருங்கிப் போய்க் கிடக்கும்
சுமைதாங்கி"

என்ற கவிவரிகள் திருமணம் விரைவில் நடக்கவேண்டும் என்ற நோக்கில் சோதிடத்தையும் ஆலமரத்தையும் நம்பி வாழும் அவலத்தை எடுத்துக்காட்டுகின்றன.

இந்தியநாடு பழம்பெரும் நாடு என்றும் வேற்றுமையில் ஒற்றுமை கொண்டது என்றெல்லாம் கூறிக்கொண்டாலும் மக்களிடத்தில் மூடநம்பிக்கைகள் இன்னும் இருந்தவண்ணமே உள்ளன. மக்கள் தங்களின் வாழ்க்கைத் தரத்தை உழைப்பால் உயர்த்தாமல் சோதிடரின் சொல்லை நம்பி வாழ்கின்றனர். அதுமட்டுமின்றி ஆலமரத்தைச் சுற்றினால் அதில் வீற்றிருக்கும் தெய்வம் திருமணம் புரிந்திட துணை செய்யும் என்ற ஆசையில் முதிர்கன்னிகளின் சுமைதாங்கி கல்லாக இருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

படைப்பாளர்கள் தாங்கள் படைக்கும் படைப்புகளில் கூறவிரும்பும் கருத்துப் பொருண்மைகளை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எடுத்துச் சொல்வதற்குத் தொன்மம், படிமக்கூறுகள் பெரிதும் துணைபுரிகின்றன என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

## தொகுப்புரை

காலங்கடந்தும் கருத்துக்களை எடுத்தியம்பும் வரலாற்றுச் செய்திகளே தொன்மமாகக் கவிஞர்கள் கையாளும் நிலையைக் காணமுடிகிறது. அது மட்டுமின்றி ஒரு நிகழ்வில் பல உண்மைகளை அடுக்கி விளங்கும் வகையில் படிமக்கூறுகளும் அமைந்து வருவதும் அவர்களின் ஆளுமைத்திறனைகக் காட்டுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சுவாமி விவேகானந்தா, கிரேக்கத் தத்துவ அறிஞர் போன்றோர் இளைஞர்களைத் தாருங்கள் நாட்டை மாற்றிக் காட்டுகிறோம் என்றும் சிந்தனை அலெக்சாண்டரின் வீரச்சிறப்பிற்கு எடுத்துக்காட்டப்படுகிறது. அதாவது காதலும், வீரமும் சங்கத் தமிழரின் இருகண்கள் என்பதை நமக்கு நினைவுப்படுத்துவதும் இவண் கவனிக்கத்தக்கது.

அறிவியல் முன்னேற்றம் அளப்பரியது என்றாலும் நாட்டில் மூடநம்பிக்கையில் மக்கள் வாழ்கின்றனர் என்பது முதிர்கன்னிகள் வழி கவிஞர் உணர்த்தும் சிந்தனை ஆராயத்தக்கதாகும்.

## சான்றெண் விளக்கம்


1. இளம்பூரணர்(உ. ஆ) தொல்காப்பியம் பொருளதிகாரம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 2000
2. கதிர் மகாதேவன், தொன்மம், கதிரவன் இலட்சுமி வெளியீடு, மதுரை – 1984.
3. பா. விஜய், உடைந்தநிலாக்கள் (பாகம்-2), குமரன் பதிப்பகம் சென்னை – 2003.
4. பா. விஜய், கைதட்டல் ஞாபகங்கள், குமரன் பதிப்பகம், சென்னை – 2003.
5. சோ. மணிவண்ணன், வில்லிப்பாரதத்தில் படிமங்கள் - தி பார்க்கர், சென்னை – 2003.
6. மு. நிலாமணி, காப்பியங்களில் கற்பனை வளர்ச்சி, தேன்த் தமிழ்ப் பதிப்பகம், சேலம் - 1991.
7. பா. விஜய், காற்சிலம்பு ஓசையிலே - குமரன் பதிப்பகம், சென்னை – 2005.
8. பா. விஜய், அடுத்த அக்னிப் பிரவேசம - குமரன் பதிப்பகம், சென்னை – 1994.


ஐ